# கனவுப் பட்டறை - புத்தக வாசிப்பு மற்றும் கலந்துரையாடல்




கனவுப்பட்டறை நூல் ஒரு சிறுகதைத் தொகுப்பு. நூலின் ஆசிரியர் மதி. அகநாழிகைப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. 156 பக்கங்களைக் கொண்ட இப்புத்தகத்தில் 12 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இப்புத்தகம் குழந்தைகள் பற்றியது. ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்களுக்கானது எனலாம். ஒரு ஆசிரியரின் அற்புதமான செயல்பாட்டின் அனுபவப்பகிர்வு என்று கூறினால் மிகையாகாது. எல்லாவற்றையும் கடந்து வாழ்வை அழகாக்கிய தருணங்களைப்பற்றியது என்றும் சொல்லலாம். இன்று குழந்தைகளிடம் பிரச்சனையாக பார்க்கப்படும் விஷ யங்களைப்பற்றியது ஞ் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

எல்லா மனிதர்களும் மகிழ்ச்சியாக அல்லது தனது வாழ்வின் மிக முக்கியமான முடிவுகள் எடுக்க அல்லது தன் வாழ்வைத் திரும்பிப் பார்க்க நினைக்கும் பருவமாக பதின்பருவம் உள்ளது. முரண்பாடுகள் நிறைந்த அப்பருவம் மாற்றங்களை உள்ளடக்கியது. சரி - தப்பை அறிந்தும் அறியாமல் புரிந்தும் புரியாமல் என அப்பருவம் பற்றிய கருத்துக்கள் ஏராளம். அப்பருவ மாற்றம் அழகானது, முக்கியமானது என நினைப்பவர்கள் வெகு சிலரே. நினைக்காதவர்களைத் திரும்பிப் பார்க்கத் தூண்டுவதாக இப்புத்தகம் உள்ளது. அதற்கு கனவுப்பட்டறை என்ற மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை அனுபவம் உதவியுள்ளது. அதன் மூலம் அரிதான இவ்வேலையை செய்திருக்கிறார் மதி. இக்கதைகளில் மதி தானே ஒரு கதை சொல்லியாகவும் தன்னை ஒரு கதை மாந்தராகவும் வைத்துப் படைத்திருப்பது பாராட்டுக்குறியது.

வளரும்பொழுது மாணவர்களின் மனதில் இருக்கும் கூச்ச சுபாவம், அன்பு, கள்ளத்தனம், குறும்பு, என எல்லா இயல்புகளையும் இன்று நாம் பிரச்சனையாகப் பார்க்கிறோம். ஆனால் அவை ஒவ்வொன்றையும் கதைக்கொன்றாக எடுத்துக் கதைகளில் கையாள்கிறார். கதைகளுக்குள் நீளும் கிளைக்கதைகள் என எழுத்து எடுத்திருக்கும் தலைப்பின் ஆழத்திற்குப் பயணிக்கிறது.

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல”

“கருணை ஒரு தொற்று நோய்”

“களவுடன் சேர்ந்து உண்மையைக் கற்றல்”

“களவும் ஒரு சாகசம்”

இதுபோன்ற வரிகள் அதிர்ச்சியூட்டும் அளவுக்கு ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றன. கதை அவ்வரிகளை வலுவூட்டுவதாக அமைந்துள்ளன. இது போன்ற பல வரிகள் நம் பள்ளிப்பருவத்தின்

இறுதியாண்டை நினைவுபடுத் திவிட்டுச் செல்கின்றன. என் பள்ளி நாட்களில் பேருந்தின் கூட்ட நெரிசலில் திட்டமிட்டு பயணச்சீட்டு வாங்காமல் பயணித்ததையும். அந்த சில்லரைகளைக்கொண்டு நாவல்பழம், மாங்காய், ஐஸ் என நண்பர்களாய் சேர்ந்து வாங்கித்தின்றிருக்கிறோம். அப்பொழுது என் நண்பன் ஒருவன், உன் அப்பாவும் பஸ்ஸில்தான் வேலை செய்கிறார். அவரையும் இப்படி ஒருவன் ஏமாத்துவான் தானே? என்றான் . அச்சமயம் அக்கேள்வி அலட்சியப்படுத்தப்பட்டாலும் பஸ்ஸில் பயணிக்கும்பொழுதெல்லாம் என் முன் அவன் கேள்வி வந்து நிற்கும். ஞானத்தின் விளைவான அவ்வுரையாடல் வாழ்வின் முக்கியமானதாக இருந்தது.

இப்படி எல்லா கதைகளும் நம் பதின்பருவத்தோடு இருந்ததாய் ஒரு உணர்வு. சில புன்னகைக்க, சில சிந்திக்க, சில வழிகாட்ட, சில வருந்த என பல்வேறு உணர்வுகளுக்குள் தள்ளியது. இப்படி நாம் வளர்ந்ததை மட்டும் ஒப்பிட்டு நகர்ந்து விடும்படியான வேலை நம்முடையதல்ல. நான் ஒரு ஆசிரியன். அதிலும் அரசுப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அவர்களின் சமூகப் பொருளாதார சாதிய சூழலை வைத்தே கணிக்கப்படுவது ஒரு புறம் நடக்கிறது. இன்னொருபுறம் அவர்களது சூழலை மனதில் கொண்டு அவர்கள் மீது அக்கறையோடு இயங்கும்பொழுது அவர்களது வாழ்க்கை மாற்றம் நிச்சயம் என்கிற உரையாடலும் நடைபெற்றுக் கொண்டுள்ளது. இவ்வுரையாடல் ஆசிரியர்களுக்கு புரியும்பொழுது அவர்களது பணி அர்த்தமுடையதாக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்புரிதல், அர்ப்பணிப்பு மற்றும் செயல்பாட்டிற்கானதாக உள்ளது. மாணவர்களை சோம்பேரி, கோவக்காரன், விளையாட்டுப்பிள்ளை, மக்கு போன்ற முத்திரைகளைத் தூக்கியெறிய உதவுவதாய் இப்புத்தகம் அமையலாம். நாம் பிரச்சனை எனக்கருதும் விஷயத்தின் காரணம், பார்வை ஆகியவற்றோடு அதைக் களையும் விதத்தை வார்த்தைகளைத்தாண்டி செய்து காட்டியுள்ளார். கவனப்படுத்தப்பட வேண்டிய அல்லது முத்திரைக் குத்தப்பட்ட அல்லது ஒதுங்கியிருக்கும் மாணவர்களின் வாழ்வில் பங்கெடுப்பது என்பது ஆசிரியப்பணியின் மகத்துவம். வார்த்தைகள், நாடகம், காட்சி எல்லாவற்றையும் கடந்து தன்னை முன்மாதிரியாகக் காட்டியுள்ளவிதம் ஆசிரியப்பணிக்கு முக்கியமான முன்மாதிரி. ஆரம்பப்பள்ளி ஆசிரியனான என்னைக்காட்டிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் வழிகாட்டியாக இப்புத்தகம் உள்ளது.

ஆசிரியர்கள் ஒருமுறை வாசிக்கவேண்டிய புத்தகவரிசையில் இதுவும் சேர்க்கப்பட வேண்டியுள்ளது.



**இரா. கார்த்திகேயன்**
அ.தொ.ப, நரம்பை